மதிப்பிற்குரிய பெற்றோர்களே/ பெற்றோர்குரிய பொறுப்பில் உள்ளோரே,

## குறிப்பு : பள்ளியில் பேணிகாத்தல் தொடர்பாக

பிள்ளைகளை பேணிகாத்தல் மற்றும் அவர்களது நலனை பேணுதலை ஊக்குவிக்க பள்ளியின் கொள்கைகள் பற்றிய விபரங்களை தரும் பொருட்டு இதனை நாங்கள் எழுதுகிறோம்.

மாநில அரசு மானியம் பெறும் பள்ளி ஆகையினால், எங்களுக்கு சில சட்ட பொறுப்புகள் இது சம்பந்தமாக உள்ளன.

அந்த பொறுப்புகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது :-

'பேணிகாத்தல் மற்றும் சிறுவர் நலனை ஊக்குவித்தல் ஆகியன பின் வருவனவற்றுக்கு வழிகாட்டுதலாக இருப்பதற்காக விளக்கப்பட்டுள்ளது. அவை : சிறுவர்களை தவறாக நடத்த (அ) கொடுமை படுத்துதலிலிருந்து காக்கவும்; சிறுவர்களின் வளர்ச்சி (அ) ஆரோக்கியத்தில் குறைகளிலிருந்து காக்கவும்; சிறுவர்கள் பாதுகாப்பான மற்றும் பயனுள்ள வகையிலான நலன் பேணப்படும் சூழலில் வளர்வதை உறுதிப்படுத்தவும்; அனைத்து சிறுவர்களின் சிறப்புகளை, திறனை முழுமையாக வெளிக்கொணர்வதில் சீரிய நடவடிக்கை மேற்கொள்வது' கல்வி கற்பதில் சிறுவர்களை பாதுகாப்பாக வைப்பது - செப்டம்பர் 2016.

எங்களது செயிண்ட். மோனிகா'ஸ் கத்தோலிக ஆரம்ப பள்ளியில் சிறுவர்கள் அனைவரும் அனைத்து நேரங்களிலும் பாதுகாப்பாக உள்ளனர் என்பதனை உறுதி செய்யும் சட்ட பொறுப்பு எங்களது தலையாய குறிக்கோளாகும். மதிப்பு மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான உறவினை உங்கள் குழந்தைகளோடு நாங்கள் ஏற்படுத்தி கொள்வதோடு, பள்ளி நாட்களில் அவர்களோடு சேர்ந்து பொழுதினை கழிக்கும் சிறப்புரிமையை நாங்கள் பெற்றுள்ளோம். சிறுவர் நலன் பற்றிய விவகாரத்தில், சிறுவரின் நலனை பேணுதலை தலையாய கடமையாக கொண்டு செயல்படுவதை ஊழியர்கள் சட்டபடியான பொறுப்புக்கு கட்டுப்பட்டு செயல்படுபவர்களாக உள்ளார்கள்.

பேணி காத்தல் பயிற்சி வகுப்பில் அனைத்து ஊழியர்களும் தொடர்ந்து பங்கேற்பர். பயிற்சியின் பொழுது, அனைத்து ஊழியர்களுக்கும் சமீபத்திய சட்ட திட்டங்கள் குறித்து தகவல்கள் வழங்கப்படுவதோடு, அனைத்து சிறுவர்களின் நலனை உறுதி செய்வதே அவர்களது தலையாய பொறுப்பாகும் என்பதனை அவர்களுக்கு நினைவூட்டுவோம். முறையற்ற உடற்காயங்கள் அல்லது புறக்கணிப்பு போன்றவற்றுகளுக்கான அறிகுறிகளை கண்டுபிடிப்பது ஆகியனவை ஊழியர்களுக்கான தொடர் பயிற்சியில் அவர்களுக்கு வழங்கப்பட்டு தயார் செய்யப்படுகின்றனர். தேவை (அ) பாதுகாப்பு குறைபாடு உள்ள சிறுவர்களை ஊழியர் அடையாளம் கண்டு, பள்ளியில் சிறுவர்களின் நலன் பேணும் ஆசிரியர்களிடம், அவர்கள் குறித்து பரிந்துரைக்க இப்பயிற்சி அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

சிறுவரின் நலன் குறித்து நாங்கள் போதிய கவனம் கொண்டுள்ளோமெனில், பன்முகவாண்மை நலன் பேணும் மையத்திற்கு **(Milton Keynes Mutli - Agency Safeguarding Hub)** பரிந்துரைக்க சட்டரீதியாக பொறுப்பேற்றுள்ளோம், தொடர்ந்து அவர்கள் இவ்விவகாரத்தில் எங்கள் துணை கொண்டோ (அ) சமூக பணியாளர்கள் உதவியுடனோ, காவல்துறை (அ) அவர்கள் தகுந்தது என கருதும் அமைப்புடன் சேர்ந்து மேற்கொண்டு விசாரணை மேற்கொள்வர்.

செயிண்ட். மோனிகா'ஸ்-ல், நாங்கள் பேணிகாத்தல் விவகாரங்களை கண்டுணர்ந்து, ஆவணப்படுத்தி மேலும் அறிக்கை அளிக்க வேண்டிய சட்டரீதியிலான பொறுப்பு எங்களுக்கு உள்ளது. மேலும் சிறுவரின் நலன் குறித்து என வரும்பொழுது, எங்களுக்கென ஒரு தெளிவான செயல்முறை பின்பற்றுவதற்கென உள்ளது. உங்களுக்கு அறிவுறுத்துவதற்காக இக்கடிதத்துடன் எங்களது செயல்முறை விளக்கம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளி அலுவலகத்தில் இதன் நகல்கள் கிடைக்கும்.

இதற்கிடையில், எந்த ஒரு சிறுவரின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்து தங்களுக்கு ஏதேனும் கவலை இருப்பின் ஆலோசனை பெற எங்கள் ஊழியரிடம் பேசலாம் (அ) பன்முகவாண்மை நலன் பேணும் மையத்தினரை தொடர்பு கொள்ளலாம் **(01908 253169 / 01908 253170)**

தங்கள் உண்மையுள்ள

**நடாலி ஷனஹன்**

**துணை தலைமை ஆசிரியர் / நியமிக்கப்பட்ட நலன் பேணும் அமைப்பு தலைமை**